
பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 14 | செவ்வாய்க்கிழமை | 30.09.2025 | அதிர்வு 060

## கிளிநொச்சியில் குண்டு வெடித்து இருவர் படுகாயம்



மோட்டார் குண்டைப் பிரித்து அதிலிருந்த வெடிமருந்தை எடுக்க முயன்றபோது, அது வெடித்ததில் இருவர் படுகாயமடைந்தனர்.

06

## ஜப்பான் பிரதமரால் அநுரவுக்கு மகத்தான வரவேற்பு





ஜப்பான் அரசின் அழைப்பின் பேரில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு ஜப்பான் பிரதமர் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

ஜப்பான் பிரதமர் அலுவலகத்துக்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபாவினால் மகத்தான வரவேற்பு அளிககப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜப்பானிய சுய பாதுகாப்புப் படையின் மரியாதையை ஏற்றுக்கொண்டதுடன், அந்த அணிவகுப்பை பார்வையிடவும் இணைந்தார்.

இருநாட்டு பிரதிநிதிகள்

07

# அநுர அணியை விரைவில் வீட்டுக்கு விரட்டியடிப்போம்

## மொட்டுவின் ஆட்சி மீண்டும் மலரும் என்கின்றார் நாமல்



“மக்களின் ஆணையை மீறிச் செயற்படும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவையும் அவர் தலைமையிலான அரசையும் மக்களின் ஆதரவுடன் மிக விரைவில் வீட்டுக்கு விரட்டியடிப்போம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சி மீண்டும் மலரும் என்பது உறுதி.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

06




‘கொள்ளையர்கள்’, ‘கொள்ளையர்களைப் பிடிப்போம்’, ‘திருடர்கள்’, ‘திருடர்களை மடக்குவோம்’, ‘அரச சொத்துக்களைச் சூறையாடிய அரசியல்வாதிகளை கைது செய்வோம்’ – இதுதான் இப்போதெல்லாம் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் தொடர் பேச்சாக இருந்து வருகிறது.

மாறி மாறி தரப்புக்கள் ஒருவரை மற்றவர் ‘கள்வன்’, ‘திருடன்’, ‘கொள்ளையன்’ என்று திட்டுவதும் குற்றஞ்சாட்டுவதும், வசை பாடுவதும்தான் தென்னிலங்கை அரசியலாகப் போய்க் கொண்டிருக்கின்றது.

1994 ஆம் ஆண்டு வரை அதிகாரத்திலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியினரை ‘நாட்டைச் சூறையாடிய கொள்ளையர்கள்’ என்று விமர்சித்துத்தான் சந்திரிகா குமாரதுங்க அதிகாரத்துக்கு வந்தார்.

ஆனால் எந்த கொள்ளையரையும் அவர் நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை வாங்கிக் கொடுக்கவில்லை. மாறாக, அதே ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஓர் அணியினரைப் பிரித்துத் தன்னுடைய அதிகாரத்தை வலிமைப்படுத்தி கொண்டார்

06











# சிங்களத்தைக் கற்பதால் ஒருபோதும் நாம் குறைந்துவிடப் போவதில்லை!

## வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களைத் தமிழர்கள் இலகுவாக்கிக் கொள்ள முடியும் என்கின்றார் ஆளுநர்

"எமது தாய்மொழிக்கு மேலதிகமாக இன்னொரு மொழியைக் கற்பதால் வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை நாம் இலகுவாக்கிக் கொள்ள முடியும். சிங்கள மொழியைக் கற்றிருந்தால் இலங்கையின் எந்தப் பாகத்திலும் பணியாற்றக்கூடியதாக இருக்கும். இன்னொரு மொழியைக் கற்பதால் ஒருபோதும் நாம் குறைந்துவிடப் போவதில்லை."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

ஹெல்தி லங்கா நிறுவனம் மற்றும் சூரிய நிறுவகம் ஆகியனவற்றின் ஏற்பாட்டில் இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சுதுமலை குபேரமஹாலில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சூரிய நிறுவகத்தின் ஸ்தாபகரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, ஈ.சரவணபவன் மற்றும் சுவிஸர்லாந்து தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது,

"கிளிநொச்சி மாவட்ட செயலராக போர்க் காலத்தில் நான் பணியாற்றிய போது, கரு ஜயசூரிய பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சராக இருந்தார். அவரின் கீழ் பணியாற்றியதை நான் எப்போதும் பெருமையுடன் நினைவு கூர்வேன். மிகச் சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கியவர் அவர்.

எந்த அரசியல் கலப்புமில்லாமல் இன மற்றும் மத நல்லிணக்கத்துக்கான அடித்தளத்தை ஏற்படுத்தும் வகையில், தமிழ் மக்களுக்குச் சிங்கள மொழியும், சிங்கள மக்களுக்கு தமிழ் மொழியும் அவரது நிறுவனத்தின் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றது. எமது நாட்டில் தமிழ் மற்றும் சிங்கள மொழி இரண்டும் முக்கியம். எங்களது காலத்தில் சிங்களம் கற்பதற்கு வாய்ப்பு பெரிதாகக் கிடைக்கவில்லை. இதனால் பல வாய்ப்புக்களை நாங்கள் இழந்திருக்கின்றோம்.

ஆனால், இன்று எமது தமிழ் மக்களும் நன்மையடையவேண்டும் என்ற வகையில் கடந்த 10 ஆண்டுகளாக சூரிய நிறுவகம் பணியாற்றி வருகின்றது. பல இளையோர் இதன் ஊடாகப் பலன் பெற்றிருக்கின்றார்கள். இன்று மொழியறிவுக்கு மேலதிகமாக கணனியறிவும் அவசியம். அதனை வளர்த்துக் கொள்ளவேண்டும். அதனூடாக வேலைவாய்ப்புக்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். எனவே, இன்று இங்கு கற்று வெளியேறும் அனைவருக்கும் சிறப்பான எதிர்காலம் கிடைக்கும் என்று நம்புகின்றேன்." – என்றார் ஆளுநர்.

சிங்களக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு ஆளுநர் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார். அத்துடன் ஆளுநருக்கான நினைவுச் சின்னத்தை, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வழங்கிக் கௌரவித்தார்.








# எனது கடவுள் பிரபாகரன்!

## என்னைப் பைத்தியம் என்று கூறுவதால் கவலையில்லை; பிணையில் விடுவிக்கப்பட்ட அர்ச்சுனா எம்.பி. தெரிவிப்பு



"மஹிந்த ராஜபக்ஷ போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாததால் எம்மைப் போன்றவர்களை இலக்கு வைக்கின்றனர். எனது கடவுள் பிரபாகரன் என்பதை அச்சமின்றி கூறுகின்றேன். ஆனால், சிங்கள மக்கள் தமக்காகச் சேவையாற்றிய மஹிந்த ராஜபக்ஷவை காட்டிக் கொடுத்துள்ளனர்.."

– இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

கொழும்பு, கோட்டையில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கடமையில் இருந்த போக்குவரத்துப் பொலிஸாருக்கு இடையூறு விளைவித்து தவறான வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நேற்று கைது செய்யப்பட்ட அர்ச்சுனா எம்.பி. கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் நேற்று நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"பிரபாகரன் எனது கடவுள் என்பதே எனது நிலைப்பாடாகும். எனக்காக உயிர் நீத்தவர்களுக்காக நான் முன்னிற்கின்றேன். ஆனால், இந்நாட்டு மக்கள் தமக்காக உயிர் நீத்த இராணுவ வீரர்களுக்காக முன்னின்ற தமது தலைவரைக் காட்டிக் கொடுத்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் தலைவர் அல்லர், ஆனால் அவர் சிங்கள மக்களின் தலைவராவார். ஆனால், அவர்கள் மஹிந்த ராஜபக்ஷவைக் காட்டிக் கொடுத்துள்ளனர். நாமல் உள்ளிட்டோர் கள்வர்கள் எனக் கூறிய போது நானும் அவற்றை நம்பினேன். முழு நாடும் அதை நம்பியது. பொய் கூறியவர்களை மேலாக பாரிய பொய்களைக் கூறுபவர்கள் வந்ததும் அனைவரும் அவர்களை நம்பினர். ஆனால் இறுதியில் அவர்களது பொய்கள் அனைத்தும் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன.

எனக்காக முன்னிலையானமைக்காக நாமலுக்கு மதிப்பளிக்கின்றேன். நாமல் தவறிழைத்துள்ளார் எனில் அவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும். அதனை விடுத்து சிறுபிள்ளைத்தனமாக செயற்பட வேண்டாம். தும்புத்தடி எழுந்து நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதாக சில எம்.பி.க்கள் தெரிவித்துள்ளனர். நான் தும்புத்தடியாக இருக்கின்றேனா அல்லது அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் அவ்வாறு இருக்கின்றார்களா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாததால் எம்மைப் போன்றவர்களை இலக்கு வைக்கின்றனர். ஒன்றில் என்னைக் கைது செய்வர். அல்லது சாமர சம்பத் தசநாயக்கவைக் கைது செய்வர். நாம் இருவரும் இல்லை என்றால் ஆளுங்கட்சிக்கு அரசியலும் இல்லை. பிரபாகரன் எனது தலைவர் என்பதை நான் அச்சமின்றி கூறுகின்றேன். அவர் பயங்கரவாதியா என பல முறை கேள்வி எழுப்பியும் யாரும் அதற்கு பதிலளிக்கவில்லை.

அந்தக் கேள்விக்குப் பதிலளித்தால் வடக்கில் வாக்கு வங்கி வீழ்ச்சியடையும் என்பதை அங்கிருப்போருக்குத் தெரியும். என்னைப் பைத்தியம் என்று கூறுவதால் எனக்குக் கவலையில்லை." – என்றார்.

# அமல் சில்வாவுக்குப் பிணை!




முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் அமல் சில்வாவைப் பிணையில் விடுவிக்குமாறு பாணந்துறை நீதிவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, அமல் சில்வாவை 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

6 கோடி ரூபா பெறுமதியான மூன்று ஜீப் வாகனங்களைச் சட்டவிரோதமாக இறக்குமதி செய்து, அவற்றுக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் அமல் சில்வா வலான ஊழல் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் நேற்று பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.





# ஜனாதிபதி - ஜப்பான் நிதி அமைச்சர் சந்திப்பு



ஜப்பான் அரசின் அழைப்பின் பேரில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஜப்பான் நிதி அமைச்சர் கதோ கசுனொபுவுக்கும் இடையில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் டோக்கியோவில் உள்ள இம்பீரியல் ஹோட்டலில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் ஜப்பான் உதவிஃ ஒத்துழைப்பின் கீழ் தற்போது செயற்படுத்தப்படும் மற்றும் செயற்படுத்த எதிர்பார்க்கப்படும் புதிய திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர், பேராசிரியர் பிவிதுரு ஜனக் குமாரசிங்க மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.





# பருத்தித்துறை பிரதேச சபைக் கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு!

(வடமராட்சி நிருபர் எஸ்.தில்லைநாதன்)

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்ட அறிக்கையில் திருத்தம் செய்யப்படாமையைக் காரணம் காட்டி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

சபையின் கூட்டம் நேற்று திங்கட்கிழமை காலை 9.45 மணியளவில் தவிசாளர் தலைமையில் ஆரம்பமானது. இதன்போது கடந்த கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்ட நிலையில் அதனைத் திருத்தம் செய்ய வேண்டும் என எதிர்க்கட்சியில் ஒன்றான ஈ.பி.டி.பி. உறுப்பினர் தவிர்ந்த ஏனைய ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (சங்கு), தேசிய மக்கள் சக்தி, சுயேச்சைக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்து வெளிநடப்புச் செய்தனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்த போதிலும் ஆட்சியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் 9 பேரும் ஈ.பி.டி.பி. ஒருவருமாக பத்து உறுப்பினர்கள் சகிதம் மாதாந்தக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கம்பளையில் இரு வீடுகளில் ஐஸ் போதைப்பொருள் மீட்பு

## கைதான தம்பதியினர் குறித்து தீவிர விசாரணை



ஐஸ் போதைப்பொருள் சகிதம் கைது செய்யப்பட்ட கம்பளை தம்பதியினர் தங்கியிருந்த மூன்று வீடுகளைச் சோதனையிட்ட பொலிஸார், இரு வீடுகளில் இருந்து ஐஸ் போதைப்பொருள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

கம்பளையில் இருந்து கினிகத்தேனை வரை ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட தம்பதியினர் கடந்த 25 ஆம் திகதி நாவலப்பிட்டியில் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நாவலப்பிட்டி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். கணவனுக்கு 7 நாட்கள் தடுப்புக் காவல் உத்தரவு பொலிஸாரால் பெற்றப்பட்டிருந்தது. ஐந்து மாதக் கர்ப்பிணியான மனைவி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் 22 வயதான கணவரை அழைத்துக் கொண்டு, அவர்கள் தங்கியிருந்த மூன்று வீடுகளை நேற்று முன்தினம் நேற்றும் பொலிஸார் சோதனைக்குட்படுத்தினர். இதன்போது இரு வீடுகளில் இருந்து ஐஸ் போதைப்பொருள், உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கம்பளை, துனுகேஉல்ல வீதியில் உடகம – அங்கெலபிட்டிய பகுதியில் உள்ள வீடு, கம்பளை, தொலஸ்பாகை வீதியில் சிங்ஹாபிட்டிய பகுதியில் உள்ள வீடு என்பவற்றைச் சோதித்தபோதே ஐஸ் பைக்கற்றுக்கள் மற்றும் உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரான ஆண் இரு திருமணங்கள் செய்துள்ளார். முதல் மனைவிக்கு 15 மாத குழந்தை ஒன்று உள்ளது எனத் தெரியவந்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திரிகா.

அதன் பின்னர் அதிகாரத்துக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரை 'கொள்ளையர்கள்', 'திருடர்கள்', 'நாட்டைச் சூறையாடியவர்கள்' என்று குற்றச்சாட்டி மைத்திரிபால சிறிசேன – ரணில் விக்கிரமசிங்க கூட்டு, 'நல்லாட்சி அரசை' உருவாக்கியது. ஆனால் அதுவும் எந்த கொள்ளையரையும் திருடர்களையும் அம்பலப்படுத்தவில்லை.

மாறாக, இரண்டு விடயங்கள் நடந்தன. பல்லாயிரம் கோடி ரூபா மோசடி இடம் பெற்றதாகக் கூறப்படும் மத்திய வங்கி பிணைமுறி விடயத்தோடு அதுவரை 'மிஸ்டர் கிளீன்' என்று பெயரெடுத்த ரணிலின் நாமம் காற்றில் பறந்தது. ஆனாலும் இன்றுவரை அந்த கொள்ளைக்கு யாரும் குற்றவாளிகள் ஆக்கப்படவில்லை.

அதுவரை ஆட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ கம்பனியை 'கொள்ளையர்கள்', 'திருடர்கள்', 'நாட்டைச் சூறையாடியவர்கள்' என்று விமர்சித்த மைத்திரிபால சிறிசேன, அதே மஹிந்த ராஜபக்ஷவை அழைத்து சட்ட விரோதமான முறையில் அரசை அவரது கையில் ஒப்படைத்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ காலத்திலும் சூறையாடல் தொடர்ந்தது. சீனி வரி விலக்கு ஊழலிலிருந்து உர இறக்குமதி ஊழல் வரை இடம் பெற்றன. ஆனாலும் யாரும் தண்டிக்கப்படும் நிலைமை வரவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடியதும், அதிகாரத்தைக் கைப்பற்றிய ரணில் விக்கிரமசிங்க நாட்டில் ஊழல், மோசடி, முறைகேடுகளை ஒழிப்பதற்கான சட்டமூலத்தை கொண்டு வந்து அத்தோடு நாட்டில் ஊழல் ஒழிந்தது என்றார். ஆனால் அது தொடர்ந்தது மக்களுக்கு நன்கு தெரியும்.

அதற்கு இப்போது உயர்நீதிமன்றம் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு மூன்று வருடச் சிறைத் தண்டனை விதித்த வழக்கு நல்ல உதாரணம். ஊழல் எவ்வளவு தூரம் ஊடுருவி நிலை கொண்டது என்பதற்கு அது நல்ல சான்று. ஆனாலும் அதிலும் கூட உண்மையான ஊழல்வாதிகள் – காரண கர்த்தர்கள் – சூத்திரதாரிகள் – சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்று நம்புவதற்கு வாய்ப்பில்லை.

இப்போது அதே 'கொள்ளையர்களை' – 'திருடர்களை' – 'நாட்டைச் சூறையாடியவர்களை' மடக்கிக் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று சூளுரைத்து அதிகாரத்துக்கு வந்திருக்கின்ற அநுர கம்பனியும் இதுவரையில் அத்தகையோரை மடக்கித் தண்டிப்பதற்கான விடயத்தில் ஏதும் பிரயோசனமாக சாதித்ததாகத் தெரியவில்லை.

மாறாக, சர்ச்சைக்குரிய பொருள்களுடன் வந்த 363 கொள்கலன்களை சுங்கப் பரிசோதனையின்றி நாட்டுக்குள் சத்தம் சந்தடியின்றி அனுமதித்த அலங்கோலம்தான் அரங்கேறியிருக்கின்றது.

'திருடரைப் பிடிப்பது', 'கொள்ளையரை மடக்குவது', 'நாட்டைச் சூறையாடியவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பது' என்ற பேச்சு எல்லாம் இலங்கை அரசியலைப் பொறுத்தவரை பேச்சுப் பல்லக்குத்தான். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தந்திரோபாய மந்திரங்கள்தான் போலும். அதற்கு மேல் எதுவும் இந்த விடயங்களில் நடப்பதாக இல்லை.

அதுதான் உண்மை.

'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு எண்டதாம்...' என்ற கதையாக அரசியல்வாதிகள் மாறி, மாறி 'திருடர்', 'கொள்ளையர்' என்ற குற்றம் சுமத்திக் கொண்டிருக்க வேண்டியதுதான்....! பொதுமக்கள் அதைப் பார்த்து ஏமாளிகளாக மாறி, மாறி வாக்களித்து முட்டாள்களாக வேண்டியதுதான்...!

## அநுர அணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதி அநுர மீதும் அவர் தலைமையிலான அரசு மீதும் நாட்டு மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். மக்களின் ஆணையை மீறி அவர்கள் செயற்பட்டு வருகின்றார்கள்.

அரசின் முறையற்ற தீர்மானங்களுக்கு எதிராகப் போராடும் மக்களை பொலிஸார் மூலம் துன்புறுத்தி அடக்க ஜனாதிபதி முயல்கின்றார்.

கடந்த ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்களை ஜனாதிபதி அநுரவும் அவர் தலைமையிலான அரசும் திட்டமிட்டுப் பழிவாங்கி வருகின்றனர்.

இந்த அநுர அணியை மக்களின் ஆதரவுடன் மிக விரைவில் வீட்டுக்கு விரட்டியடிப்போம். மொட்டுக் கட்சியின் ஆட்சி மீண்டும் மலரும் என்பது உறுதி." – என்றார்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சி, ஆனையிறவு – தட்டுவன் கொட்டி பகுதியில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், தென்மராட்சி – கச்சாயைச் சேர்ந்த சிங்கராசா அனுராஜ் (வயது 26), கேதீஸ் (வயது 50) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

படுகாயமடைந்தவர்களில் ஒருவரான அனுராஜ் தனது தாயாரின் வீட்டுக்குப் படுகாயமடைந்த மற்றையவரையும் அழைத்துச் சென்றுள்ளார். இருவரும் அந்தப் பகுதியில் வெடிக்காத குண்டுகளை எடுத்து அவற்றில் இருந்து வெடிமருந்து சேகரித்து வந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில், இருவரும் நேற்று பாழடைந்த வீடு ஒன்றில் இருந்து மோட்டார் குண்டு ஒன்றை எடுத்து அதனைப் பிரித்து, அதில் இருந்த வெடி

மருந்தை எடுக்க அவர்கள் முயன்றுள்ளனர். அப்போது, அந்தக் குண்டு வெடித்ததில் இருவரும் படுகாயமடைந்தனர் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து, இருவரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவருக்கு இரு கால்களும் கடுமையாகச் சிதைந்தமையால் சத்திர சிகிச்சை மூலம் அவை வெட்டி அகற்றப்பட்டன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# ஜப்பான் பிரதமரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபாவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு ஆரம்பமானது.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால நெருங்கிய நட்புறவைத் தொடர்ந்து பலப்படுத்தி, இருநாடுகளுக்கும் இடையில் வர்த்தக, முதலீடு, பொருளாதார, அபிவிருத்தி உதவி மற்றும் வலய பாதுகாப்பு போன்ற விடயங்களை உள்ளடக்கும் வகையில் பல்வேறுபட்ட துறைகளிலான ஒத்துழைப்பை தொடர்ந்து பரவலாக்குவது குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இரு தரப்பினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியைத் தொடர்ந்தும் பிரதிபலிக்கும் வகையில், பால் துறையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான திட்டம் மற்றும் உத்தியோகபூர்வ பாதுகாப்பு உதவித் திட்டம் குறித்த பரிமாற்று ஆவணம் கைச்சாத்திடும் நிகழ்வும் இதன்போது நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கூட்டு ஊடக சந்திப்பில் உரையாற்றிய ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபா இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவமான இடமாக அமைந்துள்ள இலங்கையின் ஸ்தீரத்தன்மை மற்றும் அபிவிருத்தி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், அதற்கமைய இலங்கையுடனான கூட்டாண்மையை மேலும் மேம்படுத்தி விஸ்தரிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, “அந்நியோன்ய நம்பிக்கை, கௌரவம் மற்றும் பலமான தொடர்பில் அடிப்படையிலே இலங்கை மற்றும் ஜப்பான் இடையிலான நீண்டகால நட்புறவு தங்கியுள்ளது. ஜப்பான் பிரதமருடனான பேச்சுவார்த்தை இலங்கை – ஜப்பான் இடையிலான தொடர்புகளின் முக்கிய மைல்கல்லைக் குறிக்கின்றது. அந்த உடன்பாடுகளின் முழுமையான பலனை அடைந்து அபிவிருத்தி மற்றும் ஸ்தீரத்தன்மைக்கான பயணத்தில் ஜப்பானுடன் இணைந்து பணியாற்ற இலங்கை அர்ப்பணிப்புடன் இருக்கின்றது.” – என்று சுட்டிக்காட்டினார்.

ஜப்பான் அரசின் ஒத்துழைப்புடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த பொருளாதார நெருக்கடியினால் இடையில் கைவிடப்பட்ட 11 அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பித்து அதன் பலனை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக ஜப்பான் அரசு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதிய கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக ஜனாதிபதி இதன்போது ஜப்பானுக்கு நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபா இடையிலான உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையின் பின்னர் இரு தரப்பினால் கூட்டு அறிக்கையொன்று ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டன.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர், பேராசிரியர் பிவிதுரு ஜனக் குமாரசிங்க,டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



















## நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# லாயக்கற்ற கட்டமைப்பு

மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி மீதான பாலியல் வல்லுறவு மற்றும் அவரும் குடும்பத்தவர்களும் கொடூரமாகக் கொல்லப்பட்ட வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராணுவச் சிப்பாய் சோமரத்ன ராஜபக்ஷ இராணுவத்தினரால் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் சாட்சியம் வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றார் என அறிவித்திருக்கும் நிலையில், அவர் விசாரணை செயன்முறைகளில் உள்வாங்கப்படுவாரா என வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவின் அறிக்கையாளர்கள் இலங்கை அரசாங்கத்திடம் நேரடியாகக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரசாங்கத்தின் சார்பில் அதற்குப் பதிலளித்துள்ள அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் சோமரத்ன ராஜபக்ஷவைச் சந்தித்து அவசியமான தகவல்களைப் பெற்றிருக்கின்றனர் என்று அங்கு தெரிவித்துள்ளார்.

அத்தகவல் உண்மைதான். ஆனால், அதற்கு அப்பால் என்னவென்பதுதான் இப்போது கேள்வி. சோமரத்ன ராஜபக்ஷவின் சாட்சியம் சட்ட செயன்முறைக்குள் கொண்டுவரப்படுமா, அவர் அளித்த சாட்சியங்கள் உள்வாங்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் புலன்விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு படுகொலையாளிகள் சட்டத்தின் முன் கொண்டு வரப்படுவார்களா என்பதுதான் கேள்வி.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐ.நா. அதிகாரியினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பதிலளித்த பொலிஸ் திணைக்கள அதிகாரி, சோமரத்ன ராஜபக்ஷவின் வெளிப்படுத்தல்கள் இலங்கையின் குற்றவியல் நீதிக்கட்டமைப்பின் சுயாதீனத்துவம், பக்கச்சார்பின்மை மற்றும் நடுநிலைமை என்பவற்றுக்கான நிரூபணமாக அமைந்திருப்பதாக சுட்டிக்காட்டிப் பெருமிதம் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் அந்தப் பதிலே இலங்கையின் குற்றவியல் நீதிக்கட்டமைப்பின் பக்கச் சார்பான போக்கையும், சுயாதீனத்தனமை இல்லாத பண்பியல்பையும், நடுநிலைத்தன்மையில்லாத பேரினவாத வெறித்தனத்தையும் வெளிப்படுத்தி நிற்பதை அந்த அதிகாரி உணரத் தவறியமைதான் ஆச்சரியத்துக் குரியது.

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் சோமரத்ன ராஜபக்ஷவினால் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் முதன்முதலாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் குறித்து விளக்கமளித்த அவர், அதனையடுத்து செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் ஊடாக 15 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டன எனவும், அவற்றில் 4 உடல்கள் யாருடையவை என அடையாளம் காணப்பட்டன எனவும் தெரிவித்தார்.

அது உண்மைதான்.

ஆனால் அப்படி அடையாளம் காணப்பட்ட நான்கு பேரும் கடத்தப்பட்டமை, காணாமலாக்கப்பட்டமை, சித்திரவதை செய்யப்பட்டமை, கொல்லப்பட்டமை ஆகியவை தொடர்பில் அவர் சார்ந்த பொலிஸ் துறையும் இலங்கையின் குற்றவியல் நீதிக் கட்டமைப்பும் எந்த நடவடிக்கையும் எடுக்கவேயில்லை என்பதையும் அந்த அப்பாவித் தமிழர்கள் நால்வர் தொடர்பில் குற்றம் இழைத்த படையினரும் கூட சட்டத்தின் முன் கொண்டு வரப்படாமல் சட்ட விலக்களிப்பு இன்று வரை நீடிக்கின்றது என்பதையும் அவர் கூறாமல் - குறிப்பிடப்படாமல் - மறந்து விட்டார் போலும்.

பல நூற்றுக்கணக்கானோர் இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் அடையாளம் காணப்பட்ட நாலு பேர் தொடர்பாக கூட நடவடிக்கை எடுக்க லாயக்கற்ற குற்றவியல் நீதி கட்டமைப்புத்தான் தங்களுடையது என்பதை அந்த பொலிஸ் பேச்சாளர் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்றே கொள்ள வேண்டி இருக்கின்றது.

## கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்;

# ஹேமமாலினி எம்.பி. தலைமையில் ஆய்வுக் குழு அமைத்தது பா.ஜ.க.



கரூறில் த.வெ.க. தலைவர் விஜய்யின் பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்துள்ள நிலையில், சம்பவம் குறித்து ஆராயவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களை சந்திக்கவும் 8 பேர் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் குழுவை பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி. நட்டா அறிவித்துள்ளார். ஹேமமாலினி எம்.பி. தலைமையில் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாக பாஜக தேசிய பொதுச் செயலாளர் அருண் சிங் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"கரூரில் நடைபெற்ற த.வெ.க. கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், கூட்ட நெரிசலுக்கு வழிவகுத்த சூழ்நிலை குறித்து ஆராய்ந்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து விரைவாக அறிக்கை அளிப்பதற்காக 8 பேர் கொண்ட ஒரு குழுவை ஜெ.பி.நட்டா அறிவித்துள்ளார். தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த இக்குழு, விரைவில் கரூருக்கு வருகை தரும்.

குழுவின் ஒருங்கிணைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமமாலினி இருப்பார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுராக் தாக்கூர், தேஜஸ்வி சூர்யா, பிரஜ் லால், ஸ்ரீகாந்த் ஷிண்டே (சிவ சேனா), அப்ரஜிதா சாரங்கி, ரேகா ஷர்மா, புட்ட மகேஷ் குமார் (தெலுங்கு தேசம் கட்சி) ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அன்புமணி - அன்பில் மகேஸ் வார்த்தைப் போர் அதிகரிப்பு





கரூர் துயர சம்பவத்துக்காக தேம்பி தேம்பி அழுத அமைச்சருக்கு ஒஸ்கர் விருது தான் கொடுக்க வேண்டும்" என பா.ம.க. தலைவர் அன்புமணி தெரிவித்த கருத்துக்கு, தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பதிலளித்துள்ளார்.

இது குறித்து அன்பில் மகேஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

"மரியாதைக்குரிய அண்ணன் அன்புமணி ராமதாஸ், நாகரிகமற்று கொச்சையாகப் பேசி இருக்கிறார். கரூர் கூட்ட நெரிசலில் இறந்தவர்களில் 9 பேர் பள்ளிக்குச் செல்லும் வயதிலும், எதிர்காலத்தில் பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதிலும் உள்ள எங்கள் பிஞ்சுக் குழந்தைகள். அவர்களை என்னுள் ஒருவராக கருதுகிறேன். என்னை மக்களில் ஒருவராக கருதுகிறேன். ஆறுதல் தேடும் கோடி மனங்களில் நானும் ஒருவன்!

முதல்வர் ஸ்டாலின் சொல்வதுபோல "எந்தத் தலைவரும் தன் ஆதரவாளர் இறப்பதை விரும்பமாட்டார்!". தலைவரின் வழியில் பயணிக்கும் நாங்கள் மக்களின் பக்கம் நிற்கிறோம். ஆறுதல் தேடுகிறோம், ஆறுதல் சொல்கிறோம். வளர்த்து ஆளாக்கிவிட்ட சொந்த தந்தையை கூட கொச்சைப்படுத்துபவரின் கருத்தை இனிமேல்பொருட்படுத்த தேவையில்லை என்றே கருதுகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்

அன்புமணி கூறியது என்ன? - முன்னதாக, இன்று விருதுநகர் காரியாப்பட்டியில் செய்தியாளர்களை சந்தித்த பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், "கரூர் துயரச் சம்பவத்தை வைத்து இவர்கள் அரசியல் செய்துகொண்டு இருக்கிறார்கள். அதில் ஓர் அமைச்சர் தேம்பித் தேம்பி அழுகிறார். அவருக்கெல்லாம் ஆஸ்கர் விருதுதான் கொடுக்க வேண்டும். மக்களை வெகு நாட்கள் ஏமாற்ற முடியாது" எனத் தெரிவித்திருந்தது கவனிக்கத்தக்கது.

# பிரசாரக் கூட்டத்தில் விதிமுறைகள் மீறல்; புஸ்ஸி ஆனந்த் மீது நாமக்கலில் வழக்கு





நாமக்கல்லில் நடைபெற்ற த.வெ.க. பிரச்சாரக் கூட்டத்தில் விதிமுறைகள் மீறிய தாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகள் மீது நாமக்கல் காவல் நிலையத்தில் 5 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள் ளது.

நாமக்கல்லில் கடந்த 27 ஆம் திகதி தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் அக் கட்சி தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்கேற்கும் த.வெ.க .தலைவர் விஜய் வாகனத்தை சுற்றி 5 எண்ணிக்கைக்கு அதிகமாக வாகனங்கள் வரக்கூடாது. காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணிக்குள் பிரச்சாரத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என்பது உள்பட 20 நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

எனினும், பொலிஸார் நிபந்தனைகள் எதுவும் அன்று பின்பற்றப்படவில்லை என புகார் எழுந்தது. தவிர, மதியம் 2.45 மணியளவில் த.வெ.க. தலைவர் விஜய் கூட்டத்தில் பங்கேற்றார். காலதாமதமாக விஜய் பங்கேற்ற காரணத்தினால் அங்கு திரண்டிருந்த தவெக தொண்டர்களால் அசாதரண சூழல் ஏற்பட்டதாக நாமக் கல் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உதவி ஆய்வாளர் சாந்தகுமார் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் த.வெ.க. நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் என்.சதீஷ் குமார், கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் உள்பட கட்சி நிர்வாகி கள் மீது உண்மைக்கு புறம்பான தகவல் தந்தது, அச்சுறுத்தல் மற்றும் அதி கார துஷ்பிரயோகம் செய்து கூட்டத்தை கூட்டுவது என்பன உள்பட 5 பிரிவுக ளின் கீழ் நாமக்கல் காவல் நிலையத் தில் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

கரூரில் நடைபெற்ற த.வெ.க. தலை வர் விஜய் பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த சம்பவத்தைக் கண்டித்தும் த.வெ.க. தலைவர் விஜய்யை கைது செய்ய வலியுறுத்தியும் தமிழக மாணவர் சங்கம் என்ற பெயரில் நாமக் கல்மாநகரம்முழுவதும்ஏராளமானபோஸ் டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. இச்சம்பவத் தால் நாமக்கல் மாநகரப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# ரஷ்யாவை தாக்கினால் பதிலடி வழங்கப்படும்

## வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோ எச்சரிக்கை

ஐரோப்பிய நாடுகள், ரஷ்யாவைத் தாக்கினால் உரிய பதிலடி வழங்கப்படும் என ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச் சர் செர்ஜி லாவ்ரோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் இவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய நாடுகள் அல்லது நேட்டோ கூட்டமைப்பில் உள்ள நாடுகள் மீது தாக்குதல் நடத்தும் திட்டம் ரஷ்யாவுக்கு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதே நேரம், நேட்டோ நாடுகளோ, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளோ, ரஷ்யாவுக்கு எதிராகத் தாக்குதல் நடத்த முற்பட்டால், அதற்கு உரிய பதிலடி வழங்கப்படும் என ரஷ்ய வெளியுற வுத்துறை அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், சர்வதேச விவகாரங்களில் அமெரிக்காவும், ரஷ்யாவும் பொறுப்பான முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியம் எனவும், புதிய போர்களுக்கு வழிவகுக்கும் வகை



யில் நடந்து கொள்ளக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தி யுள்ளார்.

# வெளிநாட்டில் தயாரிக்கப்படும் படங்களுக்கு 100 சதவீதம் வரி

## உலக சினிமாத்துறைக்கு அதிர்ச்சி கொடுத்தார் ட்ரம்ப்



அமெரிக்கநாட்டுக்குவெளியேதயாரிக்கப்படும் அனைத்து திரைப்படங்களுக்கும் 100 சதவீதம் வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதை தனது ட்ரூத் சோஷியல் மீடியாவில் அவர் தெரிவித்துள்ளார்.

"ஒரு குழந்தையிடம் இருந்து மிட்டாய்களை திருடுவது போல அமெரிக்க தேசத்தின் திரைப்பட தயாரிப்புத் தொழிலினை மற்ற நாடுகள் களவாடியுள்ளன. இதில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது கலிபோர்னியா தான். ஏனெனில், அங்கு பலவீனமான மற்றும் திறமையற்ற ஆளுநர் ஆட்சி பொறுப்பில் உள்ளார்.

இந்த நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அமெரிக்க தேசத்துக்கு வெளியே தயாரிக்கப்படும் படங்களுக்கு 100 சதவீதம் வரி விதிக்க முடிவு செய்துள்ளேன். அமெரிக்காவை மீண்டும் சிறந்த தேசமாக மாற்றுவேன்" என ட்ரம்ப் அந்த பதிவில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கடந்த மே மாதம், "அமெரிக்க திரைப்படத் துறை மிக வேகமாக அழிந்து வருகிறது. மற்ற நாடுகள் அதற்கான முயற்சியை ஒருங்கிணைந்து மேற்கொண்டுள்ளன. அது அமெரிக்க தேசத்தின் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. அனைத்துக்கும் மேலாக இந்தப் படங்கள் பிரச்சார பாணியில் உள்ளன.

எங்களுக்கு வேண்டியதெல்லாம் மீண்டும் அமெரிக்காவில் திரைப்படங்கள் எடுக்க வேண்டும். அதனால் இந்தப் புதிய கட்டண முறை திரைப்படத் துறையில் நிலவும் போட்டியை சமன் செய்வதையும், அமெரிக்க தேசத்தில் உள்ள ஸ்டுடியோக்கள் தங்கள் செயல்பாடுகளைத் தொடர ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது" என ட்ரம்ப் அப்போது கூறியிருந்தார்.

மேலும், இந்த வரி விதிப்பு பணியை வணிகத் துறை மற்றும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகள் கவனிக்க அப்போது அங்கீகாரம் அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக நாடுகள் தங்கள் நாட்டு பொருள்களுக்கு அதிக வரி விதிப்பதாக குற்றம் சாட்டினார். இதையடுத்து, உலக நாடுகள் விதிக்கும் வரிக்கு ஏற்ப பதில் வரி விதிக்கப்படும் என்று கூறிய அவர், அதற்கான பட்டியலை வெளியிட்டார்.

இதற்கு 90 நாள் காலக்கெடு அறிவித்தார். காலக்கெடு முடிந்ததும், உலக நாடுகள் மீதான வரி விதிப்பு அமலுக்கு வந்தது. இந்தியா – அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்துவது தொடர்பாக 5 சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ஆனால், அமெரிக்காவின் மரபணு மாற்றப்பட்ட வேளாண் விளைபொருள்கள், பால் பொருள்களுக்கான சந்தையை திறக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை இந்தியா ஏற்கவில்லை. இதனால், உடன்பாடு ஏற்படுவதில் தாமதம் ஏற்பட்டது.

இதற்கிடையே, இந்திய பொருட்கள் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 25 வீத வரி விதித்தார். இது ஓகஸ்ட் 7 ஆம் திகதி அமலுக்கு வந்தது. அத்துடன், ரஷ்யாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதாக கூறி கூடுதலாக 25 வீத வரி விதித்தார். இது ஓகஸ்ட் 27ஆம் திகதி அமுலுக்கு வந்தது. இதன் மூலம், இந்திய பொருள்கள் மீது 50 வீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

இதே போல அண்மையில் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளுக்கு 100 சதவீதம் வரி விதிப்பதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

# கொலம்பிய ஜனாதிபதி பெற்றோவிற்கு மீண்டும் விசா வழங்கும் அமெரிக்கா



கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெற்றோவின் விசாவை அமெரிக்கா இரத்து செய்திருந்த நிலையில், தற்போது மீண்டும் வழங்குவதாக அறிவித்துள்ளது.

டொனால்ட் ட்ரம்பின் உத்தரவுக்கு கீழ்ப்படிய வேண்டாம் என கொலம்பிய ஜனாதிபதி குஸ்ராவோ பெற்ரோ அமெரிக்கப் படையணியினருக்குப் பகிரங்கமாகத் தெரிவித்ததை அடுத்தே, அவருக்கு எதிராக விதிக்கப்பட்ட புதிய நுழைவு அனுமதியினை ரத்து செய்வதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் செயலகத்திற்கு வெளியே பாலஸ்தீனிய ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய, கொலம்பிய ஜனாதிபதி, பாலஸ்தீனத்தை விடுவிக்க ஆயுதப்படை அவசியம் என மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் உரையாற்றுவதற்காக நியூயோர்க் சென்றிருந்த கொலம்பிய ஜனாதிபதி குஸ்ராவோ பெற்ரோ, அமெரிக்க ஜனாதிபதி காசாவில் இனப்படுகொலைக்கு உடந்தையாகச் செயல்படுவதாக நேரடியாகக் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# ஜனாதிபதி - ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் சந்திப்பு; பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த அவதானம்

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, நேற்று டோக்கியோவில் உள்ள இம்பீரியல் ஹோட்டலில் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் டி.எம். நகதானியை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் பிராந்திய பாதுகாப்பு குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

பாதுகாப்பு விடயங்களில் இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான தற்போதைய ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து வெகுவாக ஆராயப்பட்டது.

இந்த சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட இலங்கைத் தூதுக்குழுவினர் கலந்து கொண்டனர்.







# திரிபோஷா உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தம்

திரிபோஷா உற்பத்திக்கு தேவையான சோளத்திற்கான தட்டுப்பாடே இதற்கான காரணமென இலங்கை திரிபோஷா நிறுவனம் தெரிவித்துள்ளது.

திரிபோஷா உற்பத்திக்காக 18,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனும திக்காக கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் திருத்தங்கள் சமர்பிக்கப்பட்டுள்ளன.

இந்த திருத்தங்களை உள்ளடக்கிய புதிய அமைச் சரவை பத்திரம், எதிர்வரும் 07 ஆம் திகதி அமைச்சரவை யில் சமர்பிக்கப்பட்டு அனுமதி பெறப்படும் வரை சோள இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை திரி போஷா நிறுவனத்தின் தலைவர் அமல் அத்தநாயக்க தெரி வித்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி முதல் திரிபோஷா உற்பத்தி இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 07 ஆம் திகதியின் பின்னர் சோள இறக்கு மதியை முன்னெடுத்து திரிபோஷா உற்பத்தியை மீண்டும் வழமைக்கு கொண்டுவர திட்டமிட்டுள்ளதாக அமல் அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுவரை உற்பத்தி செய்யப்பட்ட திரிபோஷா, நாடளா விய ரீதியில் விநியோகிக்கப்பட்டுவருவதாக இலங்கை திரி போஷா நிறுவனத்தின் தலைவர் அமல் அத்தநாயக்க மேலும் கூறியுள்ளார்.




# நாட்டில் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் அதிகரிப்பு



நாட்டின் 09 மாவட்டங்களில் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் அதி கரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்தது.

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 38,764 பேர் டெங்குக் காய்ச் சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத் திய நிபுணர் பிரஷீலா சமரவீர தெரி வித்தார்.

கொழும்பு, கம்பஹா, கண்டி, களுத் துறை, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக் களப்பு மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட் டங்கள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளங்காணப்பட்டுள்ளன.

டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்களை வாரத்திற்கு ஒருமுறை அடையாளங்கண்டு, டெங்கு நோயை குறைப்பதற்குத் தேவையான நடவடிக் கைககளை மேற்கொள்ளுமாறு பொது மக்களை அவர் கோரியுள்ளார்.

ஒருவருக்கு 02 நாள்களுக்கு மேல் காய்ச்சல் நிலைமை நீடிக்குமாயின், உடனடியாக வைத்தியரை நாடுமாறும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மன்னார் தீவில் கை வைத்துள்ள அநுர அரசு நாளை கச்சதீவையும் தாரைவார்க்கக் கூடும்!

## இப்படிச் சொல்கின்றார் வசந்த முதலிகே



மன்னார் தீவில் இன்று கை வைத் துள்ள தேசிய மக்கள் சக்தி அரசும், நாளை கச்சதீவைக்கூட இந்தியாவுக்கு வழங்கு வதற்கு முன்வரக்கூடும் என்று மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"தேசிய வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்கப்படாது எனக் கூறியே தேசிய மக் கள் சக்தி ஆட்சிப்பீடமேறியது. ஆனால், இந்தியாவின் நிகழ்ச்சி நிரலே ஆட்சியா ளர்களால் இங்கு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தியாவுடன் கடந்த ஏப்ரல் மாதம் ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அவை எவ்வாறான ஒப்பந்தங்கள் என்பது பற்றி அரசு நாட்டு மக்களுக்கு இன்னும் பகிரங்கப்படுத்தவில்லை. இதற்கமைய மன்னார் தீவைக் கைப்பற்றுவதற்கு இந்தியா திட்டம் தீட்டியுள்ளது.

மன்னாரில் பாரிய சுற்றாடல் பாதிப்பு ஏற்படப் போகின்றது. மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்குத் தாக்கங்கள் ஏற்படப் போகின்றது. இவை பற்றி ஆட்சியாளர் களுக்குக் கவலை இல்லை. எதிரணியில் இருந்தபோது மன்னார் நிலைவரம் பற்றி கதைத்தனர். ஆட்சிக்கு வந்த பின்னர் அவற்றை மறந்துவிட்டனர்.

இன்று மன்னார் மக்கள் வீதிக்கு வந்துள்ளனர். மக்கள் மீது கூட தாக்கு தல் நடத்தப்பட்டுள்ளது. இதுதான் மறு மலர்ச்சியா?

இலங்கையின் கடல்வளத்தை இந் தியா கொள்ளையடிக்கின்றது. இதற்கு இலங்கை மீனவர்கள் நீதிகோரிய போதும் அரசு மௌனம் காக்கின்றது.

கச்சதீவு விவகாரம் மீண்டும் பேசு பொருளாகியுள்ளது. ஜனாதிபதி அண்மை யில் கச்சதீவு சென்றிருந்தார். அதனை இந்தியாவுக்கு வழங்கமாட்டோம் எனக் கூறியிருந்தார். தான் கூறுவதற்கு எதிரா னதையே ஜனாதிபதி செய்து வருகின் றார். எனவே, வழங்கமாட்டேன் எனக் கூறினாலும் கச்சதீவையும் வழங்கிவிடு வார்களோ என்ற அச்சம் எமக்கு உள் ளது. உள்ளக ரீதியில் பேச்சு நடக்கின் றதா என்ற சந்தேகம் எழுகின்றது." - என்றார் வசந்த முதலிகே.

# ஆளில்லா விமானம் வழங்க ஜப்பானிடமிருந்து நிதியுதவி



இலங்கை கடற்படைக்கு ஆளில்லா கண்காணிப்பு விமானங்களை கொள்வனவு செய்வதற்காக 500 மில்லியன் யென் நிதியுதவி வழங்கு ஜப்பான் இணங்கியுள்ளது.

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அந்நாட்டு பிரதமர் ஷிகெரு இஷிபாவை சந்தித்து கலந்துரையாடிய போதே இதற்கான இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

டோக்கியோவில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது இருதரப்பு கலந்துரையாடல்களின் பின்னர் கூட்டு அறிக்கை வெளியிடப்பட்டது.

ஐ.எம்.எப். வேலைத்திட்டத்தினூடாக இலங்கை ஏற்படுத்திக் கொண்டுள்ள பொருளாதார முன்னேற்றம் மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஜப்பான் பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக இந்திய சமுத்திர வலயத்தில் அமைதி மற்றும் உறுதிப்பாட்டை பேணுவதற்காக ஜப்பான் ஊடாக இலங்கை பாதுகாப்பு பிரிவிற்கு ட்ரோன்களை வழங்கவும் ஜப்பான் பிரதமர் இணங்கியுள்ளார்.

சமுத்திரப் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த சந்திப்பின் போது 11 செயற்றிட்டங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பில் ஜனாதிபதி ஜப்பான் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள முதலீட்டு மற்றும் வர்த்தக சூழல் மாற்றங்கள் தொடர்பில் ஜனாதிபதி, ஜப்பான் பிரதமருக்கு எடுத்துரைத்ததுடன் முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் ஆராய்வதற்கு ஜப்பான் வர்த்தகங்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# ஐஸுடன் கைதான சந்தேகநபரை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி



காத்தான்குடியில் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதிய காத்தான்குடி 3 பகுதியில் 51.68 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டார்.

கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 29 வயதுடைய இளைஞரிடமிருந்து பெருந்தொகை பணம், மோட்டார் சைக்கிள், 02 கையடக்கத் தொலைபேசிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 2 ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# செப்டம்பர் மாதத்தில் இதுவரையில் 126,379 சுற்றுலா பயணிகள் வருகை

செப்டம்பர் மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 126,379 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இவர்களில் அதிகமானவர்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 16,92,902 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.











# பேராதனை தாவரவியல் பூங்காவில் ‘மூன்’ அருங்காட்சியகம் திறப்பு

பேராதனையிலுள்ள றோயல் தாவரவியல் பூங்காவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள “மூன்” அருங்காட்சியகம் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பேராதனையில் உள்ள ரோயல் தாவரவியல் பூங்காவின் ஸ்தாபகர் அலெக்சாண்டர் மூனின் நினைவாக இந்த அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது.

அழிவடைந்து வரும் தாவர இனங்களைப் பாதுகாப்பது, அவற்றின் பாகங்களைப் பாதுகாப்பது மற்றும் அவற்றைப் பற்றிய அறிவியல் அறிவைச் சமூகமயப்படுத்துவதே இந்த அருங்காட்சியகத்தின் நோக்கமாகும்.

நாட்டின் தாவரவியல் பூங்காக்களின் வரலாறு மற்றும் அதன் படிப்படியான பரிணாமம், தோட்டப் பொருளாதாரம், சர்வதேச வர்த்தகம் மற்றும் அதில் விவசாயத் துறையின் பங்களிப்பு, பூ வளர்ப்பு மற்றும் தோட்ட அழகு, தோட்ட மேலாண்மை, தாவர பாதுகாப்பு மற்றும் அதன் முக்கியத்துவம் ஆகிய பிரிவுகளை இந்த அருங்காட்சியகம் கொண்டுள்ளது.
















# பத்துப் புனிதர்களின் திருப்பண்டங்கள் அடங்கிய விசேட வழிபாட்டுத் தலம் திருமலையில் திறப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

பத்துப் புனிதர்களின் திருப்பண்டங்கள் அடங்கிய விசேட வழிபாட்டு தலம், திருகோணமலை புனித குவாடலூப்பே அன்னை ஆலயத்தில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அருட் கலாநிதி கிரிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.

ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ஆலய புனரமைப்பு பணிகள் நடைபெற்ற போது,பயன்படுத்தப்படாத இரும்பு பெட்டகம் ஒன்றில் இருந்து இந்தப் பத்து திருப்பண்டங்கள் கொண்ட பேழை கண்டெடுக்கப்பட்டது. அதனை அடுத்து இத்திருப்பண்டங்கள் பாதுகாப்பான முறையில் பேணப்பட்டு தற்போது திருப்பண்டங்களுக்கான விசேட வழிப்பாட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்க திருச்சபையின் புனிதர்கள் மரணம் அடைந்த பின்னர் அவர்களது உடற்பகுதிகள் புனித பொருள்களாக பேணிப்பாதுகாக்கப்படும் பாரம்பரியம் காணப்படுகின்றது. அதற்கிணங்க பேணப்பட்டு வத்திகான் நகரின் கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகத்தில் இருந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் திருகோணமலைக்கு இந்தத்திருப்பண்டங்கள் எடுத்து வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# மட்டு. காயங்குடாவில் புலிகள் புதைத்தவற்றை தேடி விசேட அதிரடிப்படை அகழ்வு நடவடிக்கை

(கனகராசா சரவணன்)

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மற்றும் தங்கத்தை தேடி மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள புளியடிமடு காயங்குடா பகுதியில் தனியார் காணி பகுதியில் நீதிமன்ற உத்தரவு பெற்று அகழ்வு பணியை விசேட அதிரடிப்படையினர் நேற்று திங்கட்கிழமை முன்னெடுத்தனர்.

கல்லடி விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கந்தக்குட்டி ஆறுமுகம் என்பவருக்குச் சொந்தமான காணிப் பகுதியில கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் முகம் இருந்துள்ளது.

அந்தக் காலப்பகுதியில் நிலத்தில் ஆயுதங்கள் மற்றும் தங்கத்தை புதைத்து மறைத்து வைத்துளனர் என்று கூறப்பட்டமையை அடுத்து, அவற்றை அகழ்ந்து எடுப்பதற்காக விசேட அதிரடிப் படையினர் நீதிமன்ற உத்தரவு பெற்று மண் அகழ்வும் இயந்திரம் (பக்கோ இயந்திரம்) மூலம் அகழும் நடவடிக்கையை நேற்று முன்னெடுத்தனர்

இதன் போது வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கல்லடி விசேட அதிரடிப்படை பொறுப்பாளர், கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் பங்கு கொண்டு அகழ்வுப் பணியை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை மேற்கொண்ட போதும் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதையடுத்து அழ்வு பணி நிறுத்தப்பட்டு முடிவுக்கு கொண்டுவந்து அங்கிருந்து விசேட அதிரடிப்படையினர் வெளியேறினர்.

இந்தப் பகுதியில் கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்துள்ளதுடன் அங்கு அந்த நேரம் புலிகளின் முகாம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மன்னாரில் மாற்றுவலு சக்திக்காக மக்களைப் பணயம் வைக்கலாமா?

## சுரேஷ் பிரேமச்சந்திரன் காட்டத்துடன் கேள்வி



மன்னார் தீவுப்பகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்களினால் நிலத்தடிநீர் பாதிக்கப்படுவதுடன் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று சமூக ஆர்வலர்களும் சூழலியலாளர்களும் உளவியல் அறிஞர்களும் கருத்து தெரிவிக்கின்ற நிலையில் அரசாங்கம் தனது பிடிவாதத்தைக் கைவிட்டு மக்களின் வாழ்வியல் உரிமையை உத்தரவாதப்படுத்த முன்வரவேண்டும் என்றும், எத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளும் மக்களின் வளமான எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்துவனவாக இருக்கவேண்டுமே அன்றி, அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவனவாக் அமைந்துவிடக்கூடாது என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:–

இலங்கையில் மாற்று வலுசக்தியை வலுப்படுத்துமுகமாக காற்றாலை மின்கோபுரங்கள், சூரிய சக்தி மின் ஆலைகள் என பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் குறிப்பாக மன்னார் தீவுப்பிரதேசத்தில் அப்பிரதேசம் சுற்றிவர கடலைக் கொண்டிருப்பதன் காரணமாக பாரிய காற்றாலைகளை அமைக்க அரசாங்கம் தனியார் துறைகளுக்கு ஊக்கமளித்து வருகின்றது.

மன்னார் மக்கள் இரண்டு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். ஒன்று கனியவளமிக்க மண் கொள்ளையிடப்படுகின்றது. மக்கள் செரிவாக வாழக்கூடிய பிரதேசங்களில் காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன.

மன்னார் தீவில் ஏற்கனவே முப்பதுக்கும் மேற்பட்ட மின்கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றமையால் அதனுடைய இரைச்சல் ஒலி என்பது மக்களையும் மாணவர்களையும் வெகுவாக பாதித்து வருவதாக மக்கள் ஏற்கனவே முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர். மேலதிகமாக இன்னும் பல காற்றாலைகளை அமைக்க நிறுவனங்கள் முயற்சிப்பதானது மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மேல் கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

மாற்றுவலுசக்திகள் தேவை என்பதில் மாற்றுக்கருத்தில்லை. காற்றாலை மின் உற்பத்தியும் மின்உற்பத்திக்கான மாற்றுவழி என்பதையும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் மிக அதிகப்படியான காற்றாலைகளை நிறுவுவதானது மக்களின் அன்றாட வாழ்வில் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது என்பதும் உண்மையானது. இவை ஒருபுறமிருக்க, ஒவ்வொரு காற்றாலை மின்கோபுரத்தை நிறுவும்பொழுதும் எழுபதடிக்குமேல் நிலம் தோண்டப்படுகின்றது. இதன் காரணமாக கடல்நீர் ஊருக்குள் வரக்கூடிய வாய்ப்பும் மழை நீர் மண்ணுக்குள் சேகரிக்க முடியாத நிலை ஏற்படுவதாகவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

நிலத்தடிநீர் மாசுபடுவதென்பதும் கடல்நீர் உட்புகுவதும் வெறுமனே மன்னார் தீவை மட்டும் பாதிக்கின்ற விடயமல்ல. அது மன்னார் மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் நிலத்தடிநீரை பாதிக்கக்கூடும் என்ற அச்சமும் மக்களுக்கு உள்ளது. இதற்கெதிராகத் தான் மன்னார் தீவுப்பிரதேசத்தில் இருக்கின்ற மக்கள் ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

தேர்தலின் போது இவை அனைத்தும் நிறுத்தப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தாலும் இந்த வேலைத்திட்டத்தைத் தொடரும்படி ஜனாதிபதி இப்பொழுது உத்தரவிட்டிருக்கின்றார். தமிழ் மக்கள் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் மக்களையும் அவர்களது வாழ்வாதாரத்தையும் வாழ்வியல் உரிமைகளையும் அவர்களின் எதிர்காலத்தையும் அவை பாதித்துவிடக் கூடாது. இந்த விடயத்தில் அத்தகைய பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பது மக்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது. ஏற்கனவே முப்பது காற்றாலைகளை நிறுவும்பொழுது மக்கள் அதற்கான எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. ஆனால் அதனால் இன்று ஏற்படுத்தப்படும் இரைச்சலினால் நிகழும் ஒலி மாசுபாடானது மக்களுக்கு பெரும்பிரச்சினையாக இருக்கின்றது என உளவியலாளர்கள் கூறுகின்றனர். எனவே மேற்கொண்டு காற்றாலை மின்கோபுரங்களை அமைக்க வேண்டாம் என்பதுதான் மன்னார் மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது. இதனை அரசு கவனத்துடன் பரிசீலப்பதை விடுத்து இதற்கெதிராகப் போராடுபவர்களை அடித்துத் துன்புறுத்துவதும் சிறையிலடைப்பதும் ஜனநாயக விரோதமானதும் சர்வாதிகார அணுகுமுறையுமாகும்.

அரசாங்கம் இவற்றைப் புரிந்து கொண்டு ஆட்சியாளர்கள் தேர்தல் காலத்தில்கொடுத்தவாக்குறுதிகளையும் மன்னார் மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் கவனத்தில் எடுத்து ஏனைய காற்றாலை மின்கோபுர அமைப்புகளை வேறு பொருத்தமான இடங்களுக்கு மாற்றுவதே சிறந்ததெனக் கருதுகிறோம். அத்தகைய முடிவெடுப்பதானது மன்னார் மக்கள் அமைதியாகவும் தமது வாழ்வாதாரங்களைப் பாதுகாத்து வாழவும் வழிவகுக்கும் எனக் கருதுகின்றோம். – என்று உள்ளது.




# யானைகள் - மனிதர்களிடையே முரணற்ற வாழ்வை வலியுறுத்தி கையொப்பம் பெறும் நிகழ்வு வடக்கில்

யானைகள், மனிதர்களிடையே முரணற்ற வாழ்வை வலியுறுத்தும் கையொப்பம் பெறும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

இலங்கைக் காட்டு யானைகள் பாதுகாப்பு சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

“உங்கள் பேராசைக்காக யானைகளைக் கொல்லாதீர்கள்” எனும் தொனிப்பொருளில் நேற்று ஆரம்பமான கையொப் பம் சேகரிக்கும் நடவடிக்கை இன்றும் யாழ்ப்பாணத்தில் தொடரவுள்ளது.









# தேர்தல் செலவு அறிக்கை சமர்ப்பிக்காதமையால் ஐக்கிய மக்கள் சக்தி செயலாளருக்கு பிடியாணை

(ஆர்.எவ்.எம்.சுஹைல்)

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒட்டிய வரவு - செலவு தொடர்பான அறிக்கையை தேர்தல் ஆணையத்திற்கு சமர்ப்பிக்காமை தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளருக்கு எதிராக நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று தனது வழக்கறிஞர் ஊடாக நீதிவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலையாகி இருந்தார்.

நுவரெலியா மாவட்டத்திற்கான ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக வரவு - செலவுத் திட்ட கணக்கறிக்கையை சமர்ப்பித்து உரிய நேரத்திற்கு கிடைக்காமையால் தேர்தல் ஆணையம் நீதிமன்றத்தின் ஊடாக இவ்வாறான நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

இதன் காரணமாக நேற்று நண்பகல் 12 மணிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மன்றில் நேரில் ஆஜராகி இருந்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டத்துக்கான உள்ளூராட்சி மன்ற கணக்கறிக்கையை நாங்கள் வழங்கி இருந்த போதும் தேர்தல் ஆணையம் தகுந்த தொடர்பாடல் இல்லாமை காரணமாக எமக்கு இந்த இடத்திற்கு வர வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. ஆகவே நாங்கள் எமது கணக்கறிக்கையை உரிய நேரத்திற்கு சமர்ப்பித்து விட்டோம்.

தேர்தல் ஆணையத்தில் சரியான தொடர்பாடல் முறை இல்லாத ஒரு காரணத்தினால் எமக்கு இவ்வாறான ஒரு துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. - எனத் தெரிவித்தார்.

# ஒரு பாலினச் சுற்றுலாப் பயணிகளை இலங்கையில் ஊக்குவிக்க வேண்டாம்

## அரசாங்கத்தின் முடிவை விமர்சிக்கின்றார் கர்தினால்

ஒரு பாலின சேர்க்கையாளர்கள், இரு பாலினத்தவர்கள், பால் மாற்றம் செய்தோர், திருநங்கைகள், இடைப்பாலினர் எனக் கூறப்படுகின்ற டுபுடீவஐஞ சமூகத்தினரை இலக்காகக் கொண்ட சுற்றுலாப் பயண சுற்றுலா துறையை மேம்படுத்தும் ஒரு திட்டத்தை இலங்கை சுற்றுலாப் பயணத்துறை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்திருப்பதாக கூறப்படுவது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கின்றது.

இலங்கையில் இத்தரப்பினரின் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு அனுமதிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் விமர்சித்துள்ளார்.

அத்தகைய நடவடிக்கை நாட்டின் கலாச்சாரத்தை அழித்துவிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நாட்டில் இத்தகைய சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும், நாட்டை ஒரு பாதுகாப்பான மற்றும் அனைவரையும் வரவேற்கும் இடமாக மாற்றுவதற்கான திட்டம் ஒன்றை சுற்றுலாத்துறை அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது.



இது தொடர்பில் கருத்து தெரிவித்த பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், "தங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத ஆசைகளை நிறைவேற்ற இங்கு வரும் வெளிநாட்டினரால் இலங்கையின் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பலியாக அனுமதிக்கக் கூடாது.

"ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இதை அறிந்திருக்கிறாரா என்பது எங்களுக்குத் தெரியாது, எனினும், அவர் பிரச்சினையின் தீவிரத்தை புரிந்துகொள்வார் என நாங்கள் நம்புகிறோம்." - எனப் பேராயர் தெரிவித்துள்ளார்.

"ஓரினச்சேர்க்கை மனப்பான்மையுடன் பிறந்தவர்களை நாம் துன்புறுத்தக்கூடாது. அவர்களை கருணையுடன் நடத்த வேண்டும். எனினும், அத்தகைய மனப்பான்மையுடன் பிறக்காதவர்களை மாற்றும்படி கட்டாயப்படுத்தக் கூடாது" எனவும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மேலும் தெரிவித்துள்ளார்.



# காத்தான்குடியில் போதை பொருள் வியாபாரி கைது

(கனகராசா சரவணன்)

காத்தான்குடியில் போதைப்பொருள் வியாபாரி ஒருவரின் வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் 51 கிராம் 680 மில்லிகிராம் ஐஸ் போதை பொருளுடன் 30 வயதுடைய போதை வியாபாரியான இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மடக்கிப்பிடித்து கைது செய்தனர். அவரிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றையும் தாங்கள் கைப்பற்றியுள்ளனர் எனக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்டப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தரவின் ஆலோசனைக்கமைய காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம்.ஜ.பி. ரத்நாயக்கவின் வழிகாட்டலில் பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மற்றும் மாவட்டப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காத்தான்குடி பிரதேசத்திலுள்ள போதை வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது வியாபாரத்தில் ஈடுபட்டு கொண்டிருந்த போதைப்பொருள் வியாபாரியை சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்து கைது செய்தமையுடன் அவரிடமிருந்து 51 கிராம் 680 மில்லிக்கிராம் ஐஸ் போதை பொருளும் போதை பொருள் வியாபாரத்துக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் மீட்டனர்


இதில் கைது செய்யப்பட்டவர் 30 வயதுடைய இளைஞர் எனவும், அவர் நீண்ட காலமாக போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இவரைப் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையைத் தாங்கள் முன்னெடுத்து வருகின்றனர் எனக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.










(பாகம்-03)

# யாழ்ப்பாணம் பழைய பூங்காவின் எஞ்சிய பகுதியும் அழியும் ஆபத்து

**(நடராசா லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் பழைய பூங்காவின் நிலம் மாவட்டச் செயலகத்திற்கே சொந்தம் இல்லை என்பது அடையாளம் காணப்பட்டமையோடு, அங்கே எந்தவொரு கட்டுமானமும் மேலதிகமாக மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் தற்போதைய வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் யாழ் மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த காலத்திலேயே முடிவு செய்யப்பட்டது.

நாகலிங்கம் வேதநாயகனிற்கு பின்னர் 5 ஆண்டுகளில் மூன்று அரச அதிபர்கள் பதவிக்கு வந்தவிட்டனர். இருந்தபோதும் இறுதியாக 2025-06-30 ஆம் திகதி யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு ஆர்த்திகாவினால் மாவட்டச் செயலகம் ஓர் வெளிப்படுத்தல் உறுதி நிறைவேற்றியுள்ளது.

1622 இலக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியானது ஓர் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் பெயரில் 13018 இலக்க பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவு செய்யப்பட்ட நம்பிக்கை பொறுப்பு சபையில் –

- ☆ மாவட்ட அரச அதிபர்
- ☆ மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்)
- ☆ மாவட்ட மேலதி அரசாங்க அதிபர் (காணி)
- ☆ உதவி அரசங்க அதிபர்
- ☆ காணிப் பதிவாளர்
- ☆ பிரதம கணக்காளர்
- ☆ பிரதம பொறியியலாளர்
- ☆ பிரதம கணக்காய்வாளர்
- ☆ பிரதேச செயலாளர் (யாழ்ப்பாணம்)
- ☆ உதவிப் பிரதேச செயலாளர் (யாழ்ப்பாணம்)
- ☆ திட்டமிடல் பணிப்பாளர்

-

தொடர்ச்சி▼





# யாழ்ப்பாணம் பழைய பூங்காவின் எஞ்சிய பகுதியும் அழியும் ஆபத்து

தொடர்ச்சி▲

ஆகியோர் அடங்கிய பத்துப் பேர் பதவி வழியில் அங்கம் வகிக்கின்றனர்.


இந்த நம்பிக்கை பொறுப்பு சபையில் அங்கம் வகிக்கும் 10 பேரில் 2025-09-25 இடம்பெற்ற கலந்துரையாடலிலும் ஆக நான்கு பேர் மட்டுமே பங்கு கொண்டுள்ளனர். அவர்களே உள்ளக விளையாட்டரங்கு அமைக்கும் முடிவை எடுத்துள்ளனர். எஞ்சியோருக்கு இன்று வரை எந்தத் தகவலும் தெரியாது.

ஆனால், இவ்வாறு நம்பிக்கை பொறுப்பு சபையின் பெயரில் எழுதிய ஆவணத்தில் இப் பூங்காவில் இனி வரும் காலத்தில் எந்தவொரு கட்டுமானத்திற்கும் இடம் வழங்குவதில்லை என்ற நிபந்தனையும் எழுதப்பட்டுள்ளது.

தற்போது கூடைப்பந்தாட்ட மைதானம், வலைப் பந்தாட்ட மைதானம் மற்றும் வாகனத் தரிப்பிடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலம் ஆகிய 3 இடங்களையும் உள்ளடக்கியே இந்த உள்ளக விளையாட்டு அரங்கு அமைக்க தற்போது முற்படுகின்றனர்.

இவற்றிற்கான மொத்த நிலம் 12 பரப்பைக் கொண்டதாக காணப்பட்டாலும், இந்த விளையாட்டரங்கின் பணிகள் முற்றுப்பெறும் சமயம் அங்கே வருபவர்களிற்கான வாகன வசதி உள்பட ஏனையவற்றுடன் பழைய பூங்காவின் விசாலமான தரைப் பகுதி என்ற சரித்திரமும் முற்றுப்பெறும் என்று நம்பலாம்.

(தொடரும்)






# இன்றைய ராசி பலன்கள்- 30.09.2025




இன்று சுமாரான செயல்களே நடைபெறும் சூழ்நிலை காணப்படும். உங்களுக்கு சாதகமான பலன்கள் காண நீங்கள் திட்டமிட்டு முயற்சி செய்ய வேண்டும். இதனால் சூழ்நிலை சீர்பெறும்.

உங்கள் பணியில் நன்மையான பலன்கள் காண கடினமாக போராட வேண்டும். என்றாலும் இறுதியில் வெற்றி நிச்சயம்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் காண பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை மேற்கொள்ளவேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமின்றி செயலாற்றினால் இழப்புகள் ஏற்படலாம். உறுதியான அணுகுமுறை மூலம் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

சில விஷயங்களில் உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். அனுசரித்து போவதன் மூலம் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொள்வது கூட கடினமாக உணர்வீர்கள்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் அணுகுமுறையில் தைரியம் மற்றும் உறுதி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் செயல்திறனில் உங்கள் திறமை வெளிப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வாரத்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் கணிசமாகஉயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்களுக்கு சாதகமான நாள். இன்று புதிய மனிதர்களை சந்தித்து அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வீர்கள். புதிய நண்பர்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு இது ஒரு நல்ல அனுபவமாக இருக்கும்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலன்களை பெற்றுத் தரும். பணியில் உற்சாகம் காட்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.இருவரும் சேர்ந்து இனிமையான நேரத்தை கழிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்ல பணத்தை செலவிடுவீர்கள்.




இன்று விழிப்புணர்வும் எச்சரிக்கையும் தேவை. கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட வேண்டும். உங்கள் நன்மதிப்பிற்கு பங்கம் வரும் வாய்ப்பு உள்ளது. எனவே சிறிது விழிப்புடன் இருக்கவும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பிணக்கு கொள்வீர்கள். இந்தப் போக்கை தவிர்ப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கம் காண முடியும்.

இன்று நிதிநிலைமையில் அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் சிறிது போராட வேண்டியிருக்கும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும் எண்ணெய் உணவு வகைகளை தவிர்த்தல் சிறந்தது.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். பொறுமையாக உங்கள் செயல்களைக் கையாளுங்கள். உணர்ச்சி வசப்படாதீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு கொள்ளாதீர்கள்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். இன்று பணியில் காணப்படும் கடினமான சூழ்நிலைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.பணப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாது. இதனால் உங்களிடம் மகிழ்ச்சியின்மை காணப்படும்.

இன்று உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வெற்றி காண்பதற்கு சாதகமான நாள். உங்கள் ஆர்வத்தை பெருக்கும் புதிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணியில் திருப்தி காணப்படும். உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் நிதி நிலைமை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க பொறுமை மற்றும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறப்பாக செயலாற்றுவதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக் கொள்ள உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள்.இதனால் இருவரிடையேயான பிணைப்பு வலுப்பெறும்.

நிதிநிலைமை எதிர்பார்த்த வகையில் காணப்படாது. பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

# இன்றைய ராசி பலன்கள்- 30.09.2025




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண இன்று முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக செயலாற்றுவதற்கு சாதகமாக இருக்காது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் பிரச்சினை ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். உற்சாகமாக இணைந்து மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க முயல வேண்டும்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்திற்காக மேற்கொள்ளவேண்டிய செலவு குறித்த கவலை காணப்படும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது.




இன்று மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் பயன ளிக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். பணியை விரும்பி மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியாக உங்கள் பணிகளை மேற்கொள்வீர்கள். உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பண வரவும் லாபமும் காணப்படும்.




இன்று பக்குவமாகவும் புத்திசாலித்தனத்துடனும் சூழ்நிலையைக் கையாள வேண்டும். இந்தப் போக்கு இன்றைய வேறுபாடுகளையும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும். பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் அதிர்ஷ்டகரமாக இருக்காது. பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று மகிழ்ச்சிகரமான வாய்ப்பு காணப்படும். மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள் அல்ல.

உங்கள் திறமை மூலம் கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை மூலம் சிறப்பாக செயலாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் உங்கள் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாகலாம்.

இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

# ஆவணப்படத் திரையிடலும் புத்தக அறிமுக விழாவும்

எழுநாவினால் தயாரித்து வெளியிடப்பட்ட “நீதிக்காக நீண்ட காத்திருப்பு” எனும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆவணப்படம் திரையிடலும் , செம்மணி தொடர்பான கவிதைகள் “வாசலிலே கிருஷாந்தி” என்னும் நூலின் அறிமுக விழாவும் அச்சுவேலி தெற்கு, கலாநிதி சனசமூக நிலையத்தில் கடந்த சனிக்கிழமை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினரும் கலாநிதி சன சமூக நிலையத் தலைவருமாகிய பி.நேருஜனின் தலைமையில் நடைபெற்றது.

நிலையத்தின் செயலாளராகிய தர்ஷனால் நூல் பற்றிய மதிப்பீட்டுரை வழங்கப்பட்டது.





